JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **3/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | **Arunachalam** | Caste | |
| Father's Name | **Nanjapagounder** | Calling | |
| Village | **Thendral Nagar, Erode Road** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு நான் காங்கேயம் பஞ்சாயத்து Union ல் எலக்ட்ரீசியன் ஆக பணிபுரிந்து விட்டு தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். என் மனைவி கௌரி மேலப்பாளையம் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வந்தவர் தற்போது பணி ஓய்வு பெற்று விட்டார். 17.11.2008 ம் தேதி நானும் என் மனைவியும் காலை 8.30 மணியளவிற்கு வேலைக்குச் செல்வதற்காக இருவரும் வீட்டை பூட்டி விட்டு சென்றோம். அன்றைய தினம் என் மனைவி கௌரி வேலை முடித்து வந்து சென்னிமலையில் உள்ள அவரது அம்மா வீட்டிற்கு சென்று விட்டார். நான் அன்றைய தினம் இரவு 8.15 மணிக்கு என் வீட்டிற்கு வந்து பார்த்த போது என் வீட்டின் கிரில் கேட் பூட்டை உடைத்து, வீட்டின் கதவின் பூட்டை உடைத்து யாரோ உள்ளே சென்று பீரோவை திறந்துள்ளார்கள். துணிமணிகள் கலைந்து போய் கிடந்தது. கட்டிலுக்கு அடியில் ஒரு Safety லாக்கர் உள்ளது.

2. அந்த Safety லாக்கரில் இருந்த நெக்லஸ் 3 பவுன், சுரேன் என்று பெயர் எழுதிய தங்க செயின் 2 1/2 பவுன், முத்துமாலை 1 1/2 பவுன், கம்மல் 7 ஜோடி 8 பவுன்,

மாட்டல் 1/2 பவுன், மொத்தம் 15 1/2 பவுன் தங்க நகைகளும், பணம் ரொக்கம் ரூ. 60, 000 ஆகியவைகள் காணாமல் போயிருந்தது. அதன் பின்னர் நான் என்னுடைய மனைவிக்கு சம்பவத்தை பற்றி தகவல் கூறினேன். அக்கம் பக்கம் உள்ளவர்களை விசாரித்தேன். சரியான தகவல் யாரிடம் இருந்து எதுவும் கிடைக்கவில்லை. நான் பெருந்துறை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டேன். நான் கொடுத்த புகார் ஏற்கனவே CC NO. 241/2009 வழக்கில் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புகாரின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை பெருந்துறை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் விசாரிக்க நடந்த விவரங்களை கூறினேன்.

3. 04.04.2009 ஆம் தேதி சித்தோடு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் பெருந்துறை காவல் நிலையத்தில் எங்கள் வீட்டில் காணாமல் போன நகைகளை பெருந்துறை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு இருப்பதாக கூறியதன் பேரில் நானும் என் மனைவியும் அன்றைய தினம் பெருந்துறை காவல் நிலையத்திற்கு சென்று காணாமல் போன நகைகளை அடையாளம் காட்டினேன். பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார். நான் நீதிமன்றத்தில் மனு செய்து நகைகளை பெற்றுச் சென்றேன். **கல் நெக்லஸ் 1, முத்துமாலை 1, சுரேன் என்று பெயர் எழுதிய தங்க செயின் 1, , கம்மல் 7 ஜோடி நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன் அவை அ.சா.பொ. 1 முதல் அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி தரப்பில் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி நகைகள் அ.சா.1யிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்படுகிறது. மாட்டல் அறுந்த நிலையில் இருந்ததால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சம்பவ சமயத்தில் நான் எங்கு பணிபுரிந்து வந்தேன் என்றால் காங்கேயம் பஞ்சாயத்து யூனியனில் பணிபுரிந்து வந்தேன். என்னுடைய பணி நேரம் காலை 9.45 மணி முதல் மாலை 5.00 மணி ஆகும். சாட்சி கௌரி என்னுடைய மனைவி என்றால் சரிதான். குப்புசாமி பக்கத்து வீட்டுக்காரர். கந்தசாமி என்னுடைய மாமனார்.

செந்தில்குமார் பக்கத்து வீட்டு நண்பர் ஆவார். மகாலிங்கம் என்னுடைய மைத்துனர் ஆவார். என்னுடைய வீட்டைச் சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளதா என்றால் உள்ளது.காம்பவுண்ட் சுவருக்கு கேட் உள்ளதா என்றால் உள்ளது. காம்பவுண்ட் சுவரின் பூட்டு உடைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

2. எனது வீட்டின் கிழபுறம் சண்முகநாதன் வீடு உள்ளது என்றால் சரிதான் அங்கு கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது. பணியாளர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருந்தார்கள். வடபுறமும், தென்புறமும் என்ன உள்ளது என்றால் காலி இடம் உள்ளது. பகவில் ஜன நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். ரோட்டின் மேலேயே என்னுடைய வீடு உள்ளது என்றால் சரிதான். என் வீட்டில் சத்தம் வந்தால் கேட்கும் அளவிற்கு தான் குப்புசாமி மற்றும் கந்தசாமி வீடு உள்ளது என்றால் சரிதான்.

3. குப்புசாமி அப்போது வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் வீட்டின் கேட்டை திறந்து கொண்டு தான் உள்ளே சென்றேன் என்றால் சரிதான். என்னுடைய வீட்டின் முன்பு கிரில் கேட்டிற்கு தனியாக பூட்டு போட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சென்று பார்க்கும் போது பூட்டு உடைக்கப்பட்டு வீட்டின் படிக்கட்டின் அருகில் இருந்தது. மரக்கதவிற்கு தனியாக பூட்டு உள்ளது என்றால் சரிதான்.

4. என்னுடைய போலீசார் விசாரணையில் மெயின் கேட் பூட்டிய நிலையில் உள்ளது என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பூட்டுகளை நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் பூட்டை எடுத்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. என்னுடைய வீட்டில் எத்தனை பெட்ரூம் என்றால் 2 உள்ளது. பெட்ரூம்கள் பூட்டப்படவில்லை. பீரோ பூட்டு உடைந்திருந்ததா என்றால் இல்லை.

5. எந்த ரூமில் உள்ள பீரோவில் உள்ள பொருட்கள் காணாமல் போனது என்றால் தென்புறம் உள்ள ரூமில் உள்ள பொருட்கள். இரகசிய அறை என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கு பூட்டு உள்ளதா என்றால் இல்லை. இரகசிய அறையில் என்ன என்ன பொருட்கள் உள்ளது என்று என் மனைவிக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொருட்கள் காணாமல் போன இடத்தில் தான் பணம் இருந்தது என்றால் சரிதான்.

6. என்னுடைய மாமனார் வீடு பாரதி நகரில் உள்ளது அங்கே என் மனைவியை விட்டு விட்டு நான் வீட்டிற்கு வந்தேன். நான் வீட்டிற்கு வரும் போது இரவு சுமார் 8.15 மணி இருக்கும். என் மனைவிக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்து நகைகளை சரிபார்த்து விட்டு புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. காணாமல் போன தகவல் தெரிந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கும் போது என்னென்ன பொருட்கள் காணாமல் போனது என்று குறிப்பிட்டு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. திருடு போயிருந்தது என்று மட்டும் தான் புகார் கொடுத்தேன். என் மனைவி தான் என்னென்ன பொருட்கள் காணாமல் போனது என்று காவல் துறையில் சொன்னார் என்றால் சரிதான்.

7. காணாமல் போன பொருட்களின் வடிவம் பற்றி புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசாரிடம் இருந்து பெற்ற பொருட்கள் எங்களுடைய களவு போன பெருட்கள் அல்ல என்றால் சரியல்ல. காணாமல் போன நகைகளில் நான் வாங்கியதா என்றால் சில பொருட்கள் வாங்கியது, சில பொருட்கள் சீதனமாக வந்தது. நான் வாங்கியதாக சொல்லப்படும் பொருட்களுக்கு இரசீதுகளை போலீசார் விசாரணையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

8. ரூ. 60,000 காணாமல் போனதாக சொல்லியுள்ளேன் எத்தனை தாள்கள் எத்தனை ரூபாய் நோட்டுகள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுத்தவுடன் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைரேகை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுத்திருப்பார்கள். காவல் நிலையத்தில் வைத்து காணாமல் போன பொருட்களை காண்பித்தார்களா என்றால் சரிவர ஞாபகம் இல்லை.

9. அதன் பின்னிட்டு காவல் துறையினர் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் விசாரித்து வாக்குமூலத்தில் என்னிடம் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சமர்ப்பித்துள்ள நகைகள் களவு போன நகைகள் இல்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் ஏற்கனவே வேறொரு வழக்கில் இருப்பில் வைத்திருந்த நகைகளை இந்த வழக்கில் காட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

10. நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச் சென்ற நகைகளும், இன்று நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நகைகளும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல.

காணாமல் போன கல் நெக்லஸ் 24.650 கிராம் என்று குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்த மனுவில் 84.50 கிராம் என்று முரண்பாடாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் எத்தனை முறை புகார் கொடுத்தேன் என்றால் ஒரு முறை புகார் கொடுத்தேன். புகார் காவல் நிலையத்தில் நான் சொல்ல அவர்கள் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான். நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை